**செய்தி வெளியீடு எண்: 134** **நாள்: 20.02.2019**

# CUG கைபேசி இணைப்பு திட்டம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, பயிற்சிப் பிரிவின் கீழ் ஆணையரகம், 7 மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள், 87 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள், 26 மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. இவை தவிர சுமார் 476 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள், 286 தனியார் தொழிற் பள்ளிகள் செயல்படுகின்றன.

இத்துறையில் பயிற்சியாளர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு நலத்திட்டங்கள் அனைத்தையும் தொடர்ந்து கண்காணிப்பதற்கு 2018–2019 ஆம் நிதியாண்டின் பட்ஜெட் கூட்டுத்தொடரில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட “அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளவும், திட்டங்களை விரைவாக செயல்படுத்திடவும், பயிற்சித்துறையின் பயிற்சி பிரிவில் உள்ள அதிகாரிகளுக்கு 9.34 இலட்சம் ரூபாய் செலவில் CUG கைபேசி இணைப்பு” வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 20.02.2019 அன்று காலை 11.00 மணியளவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அலுவலகத்தில் இந்த CUG கைபேசி இணைப்பு வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு, சிம் கார்டுகள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மை செயலாளர் திரு.சுனில் பாலிவால், இ.ஆ.ப., மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**